பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 03 2024 **SATURDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவை தேர்தல் மற்றும் ஆந்திரா, அருணாச்சலப்பிரதேசம், ஒடிசா, சிக்கிம் மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2. தேர்தல் நடத்தை நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

3. மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ள தயாராக உள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

4. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு தவறிவிட்டதாக காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

5. உலக தடகள நடைப் போட்டியில் இந்தியாவின் **Ram Baboo** வெண்கலப் பதக்கம் வென்றார்.

**>>>><<<<**

மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி ஜூன் மாதம் ஒன்றாம் தேதி வரை நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் அறிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தேர்தல் அட்டவணையை வெளியிட்டு அவர் பேசினார்.

அருணாச்சலபிரதேசம், அந்தமான் நிகோபார் தீவுகள், ஆந்திரப்பிரதேசம், சண்டிகர், கோவா, குஜராத், ஹிமாச்சலப்பிரதேசம், ஹரியானா, கேரளா, லட்சத்தீவுகள், லடாக், மிஸோரம், மேகாலயா, நாகாலாந்து, புதுச்சேரி, சிக்கிம், தமிழ்நாடு, பஞ்சாப், தெலங்கானா மற்றும் உத்ராகண்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கர்நாடகா, ராஜஸ்தான், திரிபுரா மற்றும் மணிப்பூரில் 2 கட்டங்களாகவும், சத்திஷ்கர், மற்றும் அஸ்ஸாமில் 3 கட்டங்களாகவும், ஒடிசா, மத்தியப்பிரதேசம் மற்றும் ஜார்கண்டில் 4 கட்டங்களாகவும், மகாராஷ்ட்ரா மற்றும் ஜம்மு காஷ்மீரில் 5 கட்டங்களாகவும், உத்தரபிரதேசம், பீகார் மற்றும் மேற்குவங்கத்தில் 7 கட்டங்களாகவும் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

வாக்கு எண்ணிக்கை ஜூன் மாதம் 4 ஆம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை அரசியல் கட்சிகள் முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மக்களவைத் தேர்தலை நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

நாடு முழுவதும் 96 கோடியே 80 லட்சம் வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதில் 47 கோடியே பத்து லட்சம் பேர் பெண் வாக்காளர்கள் என்றும், 19 கோடியே 75 லட்சம் பேர் இளம் வாக்காளர்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த தேர்தலில் ஒரு கோடியே 80 லட்சம் பேர் முதல் முறையாக வாக்களிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் ஒன்றாம் தேதி 18 வயதை பூர்த்தி செய்யும் அனைவரும் வாக்களிக்க தகுதியுடையவர்கள் என்று தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

மக்களவைத் தேர்தலுக்காக பத்து லட்சத்து 50 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

55 லட்சம் மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு கோடியே 50 லட்சம் பேர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் 40 சதவிகித குறைபாடுடன் கூடிய மாற்றுத்திறனாளிகளும் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் .கூறினார்.

அரசியல் கட்சிகளின் நட்சத்திர பேச்சாளர்களின் பிரச்சாரமும் தேர்தல் நடத்தை நெறிமுறைகளின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக திரு ராஜீவ்குமார் கூறினார்.

அரசியல் கட்சிகள் சிறுவர்களை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்தக்கூடாது என்றும் அவர் அறிவுறுத்தினார்.

அரசியல் கட்சிகள் சமூக வலைதளங்களை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டுமென்றும் திரு ராஜீவ்குமார் கேட்டுக் கொண்டார்.

ஆதாயத்துக்காக செய்திகள் வெளியிடப்படுவதை தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையர் குறிப்பிட்டார்.

தேர்தல் பாதுகாப்புப் பணியில் போதிய அளவு மத்திய பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் கூறினார்.

எல்லையை ஒட்டிய பகுதிகளில் ட்ரோன் மூலம் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வாக்குப்பதிவின்போது வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிக்கிம் மற்றும் அருணாச்சலப்பிரதேச சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் 19ஆம் தேதியும், ஆந்திர சட்டப்பேரவை தேர்தல் மே மாதம் 13ஆம் தேதியும் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

ஒடிசா சட்டப்பேரவை தேர்தல் நான்கு கட்டங்களாக மே மாதம் 13, 20, 25 மற்றும் ஜூன் 1 ஆகிய தேதிகளில் நடைபெறும் என்றும் தலைமைத்தேர்தல் ஆணையர் கூறினார்.

மக்களவைத் தேர்தலோடு, பல்வேறு மாநிலங்களுக்கு உட்பட்ட 26 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் நடைபெறவுள்ளதாக கூறிய அவர், அதற்கான தேதிகளையும் அறிவித்தார்.

மக்களவைத் தேர்தல் மற்றும் நான்கு மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் வாக்காளர்கள் அனைவரும் தங்களது வாக்குரிமையை செலுத்த வேண்டும் என்றும் திரு. ராஜீவ்குமார் கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு ஒரேகட்டமாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி நடைபெறும் என்று தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களவைத் தேர்தலோடு விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலும் நடைபெறும் என்றார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்கள், தற்போதும் கூட அதற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

மாற்றுத் திறனாளிகள் வாக்களிப்பதற்கு தேவையான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. சத்தியபிரதா சாஹூ தெரிவித்தார்.

இதற்கிடையே, மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க ஆர்வமாக உள்ளதாக தமிழகத்தைச் சேர்ந்த முதல்முறை வாக்காளர்கள் தெரிவித்தனர்.

>>>><<<<

வளர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

கர்நாடகா மாநிலம் **Kalburgi**-யில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

ஊழலற்ற நிர்வாகத்தை தமது அரசு உறுதி செய்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் திட்டங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைந்திருப்பதாக திரு நரேந்திரமோடி கூறினார்.

>>>><<<<

தொழிலாளர் நலனில் அக்கறையின்றி பிஜேபி தலைமையிலான மத்திய அரசு செயல்பட்டு வருவதாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்க போதிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளவில்லை என்று கூறியுள்ளார்.

>>>><<<<

உலக தடகள நடைப் போட்டியில் இந்தியாவின் **Ram Baboo** வெண்கலப் பதக்கம் வென்றார்.

**Slovakia-**வில் நடைபெற்ற இப்போட்டியின் 20 கிலோமீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இதன்மூலம் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றுள்ளார்.

>>>>END<<<<